மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 8 மற்றும் 9, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுக்கோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன. பின்னர் ஒரு நாள் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 10, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

10—

கன்னியாகுமரி மாவட்டத்தில் வீடுகட்ட
நீண்டகாலக் கடனுதவி வழங்குதல்

*16895—**டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை:**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் புயல் மற்றும் பெருவெள்ளத்தால் வீடு இழந்தோருக்கு வீடு கட்ட நீண்டகாலக் கடனுதவி செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1992-93 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீடு இழந்தவர்களுக்கென்று நிபந்தனைகளுக்குட்பட்டு நீண்டகால கடன் வழங்கப்பட்டு வருகிறது.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மக்கள் நலத் திட்டங்கள் வழங்க குமரி மாவட்டத்திற்கு வருகை தந்தபோது புயல் மற்றும் பெருவெள்ளத்தால் வீடு இழந்தவர்களுக்கு வீடு கட்ட மானியமாக ரூபாய் 3 ஆயிரமும், கடனாக 6 ஆயிரமும் வழங்க ஆணையிட்டார்கள். அதற்காக குமரி மாவட்ட மக்கள் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியை இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு பணிவுடன் சமர்ப்பிக்கிறேன். அந்த மானியத் தொகையை 5 ஆயிரமாக உயர்த்தியும், அந்தக் கடன் தொகையை 10 ஆயிரமாகவும்

1995 மார்ச் 15]

உயர்த்தினால் சுமார் 15 ஆயிரம் என்ற அளவில் இருந்தால், வீடு கட்டவசதியாக இருக்கும். அதை அமல்படுத்த அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில், 1992-93 ஆம் ஆண்டுகளில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, வீடு இழந்தவர்களுக்கு, 18 ஆயிரம் குடும்பங்களுக்கு கடன் வழங்குவதற்கு தாய் உள்ளம் கொண்ட தங்கமனத் தலைவியாம் மாண்புமிகு டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் உத்தரவிட்டு, 12,500 வீடுகளுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு சுற்றுப்பயணமாக வருகை தந்தபோது, அங்கே நலத் திட்டங்களை வழங்குகின்ற நேரத்தில் அப்பகுதியில் பாதிக்கப்பட்ட, கல்சுவருடன் ஓலைக் கூரை தாங்கிய வீடுகளுக்கு, வீடு கட்ட கடன் வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைக்கப் பெற்ற நேரத்திலே, மனிதாபிமானத்தோடு, தாய் உள்ளத்தோடு, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் சிறப்புத் திட்டமாக 3 ஆயிரம் ரூபாய் மானியமும் 6 ஆயிரம் ரூபாய் கடனும் ஹட்கோ உதவியுடன் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். தற்போது தமிழக அரசினுடைய மானியத்தை கூடுதலாக்கி தருவதற்கு எந்தவிதமான சாத்தியக்கூறும் இல்லை என்பதையும் ஹட்கோ நிறுவனத்திடமிருந்து 6 ஆயிரம் ரூபாய் கடன் தொகை வந்தவுடன் அது வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் புயல் மற்றும் பெரு வெள்ளத்தால் வீடிழந்தவர்களுக்கு வீடு கட்ட நீண்ட கால கடன் உதவி செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு நன்றி. அப்படி அந்தக் கடன் உதவி அதிகபட்சமாக எவ்வளவு ரூபாய் வழங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுமையாக வீடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு 15,000 ரூபாய். அதைப்போல கல் சுவற்றுடன் ஓலை கூரையைத் தாங்கிய வீடுகளுக்கு 9,000 ரூபாய் கடன் வழங்கப்பட்டு வருகிறது. இரண்டாவது சொல்லப்பட்ட 9,000 ரூபாய் கடன் வழங்க அரசு ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. ஹட்கோ உதவி வந்தவுடன் அந்த ஓலை கூரை கல் சுவற்றுடன் கூடிய வீடுகளுக்கு கடன் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. அப்பு நடேசன்.

திரு. இரா. அப்பு நடேசன்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஹட்கோ மூலம் வழங்கப்படும் லோன் குறித்து ஜனவரி மாதம் 27-ந் தேதி கவர்ன்மென்ட் ஆர்டர் பிறப்பிக்கப்பட்டு உள்ளது. ஆனால் இதுவரையிலும் அது சொஸைட்டி மூலம் கொடுக்கப்படவில்லை. கூடிய சீக்கிரம் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: தலைவர் அவர்களே, கூடிய விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் பள்ளத்தாக்கில் மழை பெய்தாலும் சரி வருசநாட்டுப் பகுதியில் மழை பெய்தாலும் சரி எங்கே மழை பெய்தாலும் இந்த நிலக்கோட்டை தொகுதி ஆண்டுதோறும் புயலாலும் வெள்ளத்தாலும் அடித்துச் செல்லப்படுகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்கூட அங்கே வந்து பார்த்திருக்கிறீர்கள். எனவே, கன்னியாகுமரிக்குக் கொடுக்கக்கூடிய பண உதவிகள் போன்று எங்கெங்கெல்லாம் பாதிக்கப்பட்டு இருக்கிறதோ நிலக்கோட்டை போன்ற வறண்ட பகுதியிலே பாதிக்கப்பட்ட வீடிழந்த குடும்பங்களுக்கு இந்த கடன் உதவி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *18,000* குடும்பங்கள் என்பது தமிழகத்திலே தென் மாவட்டங்களில் எந்தெந்த பகுதிகளிலே புயல் வெள்ளத்தால் *1992-93* ஆண்டுகளில் பாதிக்கப்பட்டு வீடிழந்தார்களோ அவர்களுக்கு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 11, திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

11—

தரமான பட்டு உற்பத்தி முட்டைகள் கிடைக்க நடவடிக்கை

**24534*—திரு. கே. ஏ. மனோகரன்: